அமஅபு.—129/18 (i)—2,000 பிரதிகள்—28-6-2007.

விடுநர் :

பெறுநர் :

இயக்குநர்
கலை, பண்பாட்டுத்துறை
புதுச்சேரி

அன்புடையீர் !

**பொருள் : கையெழுத்துப்படிகள் மற்றும் ஆய்விதழ்களைப் பதிப்பிக்கப் பொருள் (நிதி) உதவி கோரும் வேண்டுகோள்.**

* * * * *

மேலே குறிப்பிடப்பட்டுள்ள திட்டத்திற்காக வேண்டி இந்த வேண்டுகோளை அளிக்கிறேன். இத்திட்டத்தின் நெறிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் படித்தேன் என்றும் அதன்படி நடப்பேன் என்றும் உறுதியளிக்கிறேன். மேலும் என் சார்பாக நான் கீழ்க்காணும் கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொள்கிறேன் :—

(அ) நல்கை (நிதியுதவி) பெறுவதற்கு முன் உறுதிமொழி ஆவணத்தை ஒரு பொறுப்பாளரின் ஒப்பத்துடன் அளித்துவிடுகிறேன்.

(ஆ) திட்டங்களின் கணக்குகள் சரிவரப் பராமரிக்கப்படும். அவை எப்போதும் கல்வி இயக்கக் கலை பண்பாட்டு ஆய்வு செய்ய அணியமான நிலையில் வைக்கப்படும்.

(இ) ஒப்புதல் அளித்த நோக்கத்திற்காக இந்த நல்கை (நிதியுதவி) பயன்படுத்தப்படவில்லை என்று அரசுக்கு நம்பத்தகுந்த காரணங்கள் இருப்பின், இரண்டாம் தவணைக்கான தொகையை நிறுத்தி வைக்கலாம் என்றும் ஏற்கெனவே அளித்த தொகையை அரசு முடிவெடுக்கும் முறையிலேயே திரும்பப் பெற்றுக்கொள்ளவும் இசைகிறேன்.

(ஈ) நூல் / இதழ் நல்கை (நிதியுதவி) பெற்றுக்கொண்ட நாளிலிருந்து ஆறு மாதத்திற்குள் பதிப்பிக்கப்படும். தவறினால், நடைமுறையில் உள்ள இந்திய அரசு விகிதப்படி வட்டியுடன் நல்கையைத் திருப்பியளித்து விடுவேன்.

(உ) பதிப்பித்த உடனேயே தேவையான அளவு பதிப்பித்த படிகள் எடுத்து வைக்கப்படும்.

(ஊ) நூல் / இதழ் அச்சிட்டு பெற்று வெளியிட அணியமாகும் நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் செலவு செய்யப்பட்ட தொகையைப் பயன்படுத்தியதற்கான சான்றிதழுடன் அளிக்கப்படும்.

தங்கள் உண்மையுள்ள,

இடம் :

நாள் :

கையொப்பம்

# கலை, பண்பாட்டுத்துறை வழி மானிய உதவி பெற விழைவோர் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள்

(அ) நூலில் உபயோகிக்கப்படவுள்ள அச்சடிக்கும் பக்கங்கள் நூறு பக்கங்களுக்குமேல் இருக்கவேண்டும்.

(ஆ) கையெழுத்துப்படிகள் நேர்த்தியாக, அழகாக, செம்மையாக, நூல் வடிவத்தில் அளிக்கப்பட வேண்டும் (அல்லது) தட்டச்சு (அல்லது) கணிப்பொறி அச்சு செய்திருக்கவேண்டும்.

(இ) தாள்கள் ஒரே அளவினதாக இருக்கவேண்டும்.

(ஈ) தாளில் ஒரே பக்கத்தில் மட்டும் அச்சிட்டு இருக்கவேண்டும்.

(உ) நூல்கள் சொந்த படைப்பாக மட்டும் இருக்கவேண்டும்.

(ஊ) கையெழுத்துப் பிரதியில் எந்தப் பக்கத்திலும் ஆசிரியரின் பெயரோ, வேறு தகவலோ இருக்கக்கூடாது. முன் அட்டையில் மட்டுமே ஆசிரியரின் பெயர் மற்றும் வேறு தகவல்கள் இருக்க வேண்டும்.

(எ) ஏற்கெனவே அச்சிட்ட புத்தகங்கள் மானியத்திற்கு ஏற்றுக்கொள்ளபட மாட்டாது.